29.07.2025 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண்.49 /2021 ) திரு. ராஜ்.

<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>-

1) வா.சா.ஆ.1 ஆவணம் நான் பிறப்பதற்கு முன்பே ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணம்பற்றி எனக்குநேரில் தெரியாதுஎன்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம்பற்றி முதன்முதலில் எப்போது தெரியவந்தது என்றால் 1975 ஆம் ஆண்டு தெரியவந்தது. 1975 ல் யார் குடியிருந்தார்கள் என்றால் நாங்கள் தான் ஆடு,மாடுகள் கட்டி புழங்கிவந்தோம் அது என்ன கட்டிடம் என்றால் ஓலைகுடிசை. அந்த ஓலை குடிசைக்கு கதவு எண் உண்டா என்றால் இல்லை. காளியம்மாள் எந்த வருடம் குடியிருந்தார் என்றால் எங்கள் ஓலை குடிசை இருக்கும் போதே காளியம்மாளும், அவரின் கணவரும் குடியேறி விட்டார்கள்.காளியம்மாளுக்கு குழந்தைகள் கிடையாது என்றால சரிதான். காளியம்மாள் கணவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. காளியம்மாளின் வளர்ப்பு மகன் பற்றி தெரியுமா என்றால் தெரியும் அவர் பெயர் காளிராஜ். காளிராஜ் மட்டும் காளியம்மாளுடன் தொடர்ந்து இருந்து வந்தார் அவரின் சகோதரி வந்து போய் இருந்தார். ஓலை குடிசை என்பது எப்போது ஓட்டு வீடாக மாறியது என்றால் 2 வருடங்கள் கழித்து ஓட்டு வீடாக மாறியது.அப்போதும் காளியம்மாள் தான் தொடர்ந்து இருந்து வந்தார். அந்த இடத்திற்கு காளியம்மாளின் பெயருக்கு பட்டா மாறியது என்றால் அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் யார் எழுதிக்கொடுத்தது என்றால் காளியப்பன் ஆசாரி எழுதிக்கொடுத்தார். அதில் மைனர்களாக யார் யார் காட்டப்பட்டுள்ளது என்றால் செல்லையா, சுப்பையா காட்டப்பட்டுள்ளது. அவர்களை மைனர்களாக காண்பித்து காளியப்பன் ஆசாரி எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதிக்கொடுத்த காளியப்பன் பெயர் பட்டா இருந்து வந்தது என்ற விவரம் துலங்காது என்றால் அதுபற்றி தெரியாது அப்போது நான் சின்ன பையனாக இருந்தேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில காளியப்பன் ஆசாரி தவிர வேறு யாரும் கையெழுத்து செய்யவில்லை. 2) குறிப்பாக சுப்பையா கையெழுத்து செய்யவில்லை என்றால் 5 வயது பையன் என்பதால் கையெழுத்து செய்யவில்லை. சுப்பையா என்பவர் காளியம்மாளின் கணவர் என்பதை காட்டக்கூடிய ஆவணம் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. எனது தகப்பனார் 2004 ல் இறந்துள்ளார் என்றால் சரிதான். எனது தந்தை பெயரில் 2004 வரை தாவா இடத்திற்கு பட்டா ஏற்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் வீடு

இருந்ததாக துலங்காது என்றால் சரிதான். காலியிடமாக காண்பிக்கப்பட்டுள்ளது. ஓலை குடிசையாக இருந்து ஓட்டுவீடாக எப்போது மாறியது என்று எனக்கு தெரியாது என்றால் 1978 ல் மாறியது. ஓட்டுவீடாக மாறிய பின்னர் எனது தந்தை பெயரிலோ எனது பெயரிலோ பட்டா மாறவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்த பின்பும் எனது பெயரில் தீர்வை ரசீது எதுவும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிராம சர்வே எண்ணோ அல்லது நத்தம் சர்வே எண்ணோ இல்லை என்றால் சரிதான். ஓட்டுவீடாக மாறியபின்னர் மின் இணைப்பு கொடுத்துள்ளார்கள் என்றால் தெரியாது அந்த மின் இணைப்பு எனது பெயரிலோ, எனது தந்தை பெயரிலோ இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் குடியிருந்து வரும் இடத்திற்கு அவர்கள் பெயதில் மின் இணைப்பு உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் போது அந்த வீட்டின் தீர்வை காளியம்மாள் கணவர் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. காளியம்மாள் பெயரில் பட்டாவும் ஏற்பட்டுள்ளது என்றால் அதுவும் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் போதே 1 ம்பிரதிவாதியின் கணவர் சண்முகவேல் என்பவருக்கு 11.12.2000 ல் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர் பெயருக்கு கிரையம் கொடுத்தது பட்டாவை ரத்து செய்ய நானோ எனது தகப்பனாரோ எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்றால் எங்களுக்கு அது பற்றி தெரியாது.

3) வா.சா.ஆ.1 பத்திரத்தில் தென்வடல்10 ½ கெஜம் கிழமேல் 10 ½ கெஜம் என்பதால் அது சதுரமான இடம் என்றால் சரிதான். 1 ம்பிரதிவாதியின் கணவர் சண்முகவேல் கிரையம் பெற்ற ஆவணம் வா.சா.ஆ.5 ஆக எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 கிரையம் ஆவணத்தில் கிழமேல் அடி 23 .62 தென்வடல் அடி 19 அடி மனை நிலமாக அதில் காண்பிக்கப்பட்டுள்ளதால் வா.சா.ஆ.1 ல் கண்ட சொத்து வேறு என்றும் வா.சா.ஆ.5 ல் கண்ட சொத்து வேறு என்றுசொன்னால் இரண்டு இடமும் ஒன்று தான். இரண்டு இடமும் ஒன்று நான்சொல்லுவது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தில் காளியம்மாள் பெயரில் பட்டாவும் ஏற்பட்டதாகவும், அவரின் கணவர் பெயரில் தீர்வை ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ.5 கிராம நத்தம் என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் நான் பார்க்கவில்லை. அதில் சர்வே எண்.256/2 கிராம நத்தம் என்று சொல்லப்பட்டுள்ளதுஎன்றால் சரிதான். எங்கள் ஊரில் ராஜமாணிக்கம்

என்ற ஒருவர் இருக்கிறார் அவர் எனக்கு நெருங்கிய உறவுக்காரர் இல்லை ஆனால் உறவுக்காரர் என்றால் சரிதான். வா.சா.ஆ.5ல் மேற்படி ராஜமாணிக்கம் சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் ராஜமாணிக்கத்தின் அப்பா கையெழுத்து போட்டுள்ளார். நானும்,எனது சகோதரிகளும் பிறந்தது முதல் குமரெட்டியாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5ல் எல்லா பிரதிவாதிகள் அவரது பிள்ளைகளும் குடியிருந்து வருகிறார்கள் என்றால் தற்போதும் அவர்கள் தான் குடியிருந்து வருகிறார்கள். வா.சா.ஆ.1 என்பது எனது தகப்பனார் கிரையப்பத்திரம் வா.சா.ஆ.5 என்பது 1ம்பிரதிவாதியின் கணவர் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் என்றும் நான்கு மால்கள் வெவ்வேறானது என்று சொன்னால் 3 மால்கள் ஒன்று போலும் ஒரு மால் மட்டும் வேறு யாரும் கிரையம் பெற்றியிருக்கலாம். நான் வழக்கு தாக்கல் செய்துள்ளது எனது தகப்பனார் பெயரில் உள்ள வா.சா.ஆ.1ன் அடிப்படையாக வைத்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம்.

<u>குருக்கு விசாரணை தொடர்ச்சிக்காக</u> - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
29.07.2025.